**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 291 /2021 PW1**

18.02.2026 **வா..சா.1 கோதாவரி சத்திய வாக்குமூலத்தின் பேரில் 6 முதல் 8 மற்றும் 10, 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

29.12.1954 அன்று வழக்கு சொத்தின் ஒரு பகுதியை எனது அப்பா கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 30.12.1955ல் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை எனது அப்பா கிரையம் பெற்றாரா என்றால் எனக்கு தற்போது நியாபகம் இல்லை. மேற்கண்ட இரண்டு சொத்துக்களையும் எனது அப்பா தான் எனது அம்மா பெயருக்கு தான பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. தானப் பத்திரம் மூலமாக வந்த சொத்தை எனது அம்மா அடமான வைத்து அதனை மீண்டும் பணத்தை செலுத்தி ரத்து செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்று கேட்டால் 1954ல் திருமணம் ஆனது. எனது அப்பா சொத்து வாங்கி, எனது அம்மா பெயருக்கு தானம் எழுதி அந்த தான சொத்தை எனது அம்மா அடமானம் வைத்து பிறகு செலுத்தி பைசல் செய்த விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றும், தற்போது வழக்கிற்காக தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது உடன் பிறந்த கோவிந்தசாமி, பாபு, பிரபு ஆகிய மூவருக்கும் எனது அம்மா ஆரம்பத்தில் ஒரு உயில் எழுதி வைத்தார் என்று சொன்னால் எனது அம்மா அவ்வாறு எழுதி வைத்ததாக என்னிடம் சொல்லவேயில்லை. முதல் உயிலை ரத்து செய்து விட்டு இரண்டாவதாக ஒரு உயில் எழுதினார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது அப்பா 2010ம் ஆண்டு இறந்து விட்டார். எனது அம்மா 2015ம் ஆண்டு இறந்தார். எனது அப்பா இறந்த இறப்பு சடங்கிற்கு வந்த போது எனது அம்மா எனது குடும்பத்தார் அனைவரிடமும் முதல் உயில் எழுதி வைத்தது அதனை ரத்து செய்து விட்டு இரண்டாவது உயில் எழுதியது குறித்த விவரங்களை சொன்னார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பாபு, பிரபு வீட்டிற்கு போவேனா என்றால் பிரபு வீட்டிற்கு மட்டும் தேவையிருந்தார் போவேன், பாபு வீட்டிற்கு எப்போதும் செல்ல மாட்டேன். என்னுடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்த்து 8 பேர் ஆகும். அதில் 3 ஆண்கள், 5 பெண்கள் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த பெண்கள் நாங்கள் அனைவரும் சொத்தானது உயில்படி ஆண் வாரிசுக்கு தான் என சொல்லிவிட்டோம் என்றும், அதனால் தான் மற்ற பிரதிவாதிகள் வழக்கை நடத்த முன்வரவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா இறந்த போதே வழக்கு போடாமல் தற்போது என்னுடன் பிறந்த ஆண் வாரிசுகளுக்கும் எனக்கு இடையே பெண்ணை திருமணம் செய்து கொடுப்பது சம்மந்தமாக ஏற்பட்ட

பிரச்சனையின் விளைவாக காலம் தாழ்த்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தானத்தின் மூலம் பெற்ற சொத்தை ஒரு நபர் உயில் எழுதி வைத்தால் அது சட்டப்படி செல்லும் என்றும் அது போலத்தான் எனது அம்மா உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. எனக்கு எனது அம்மா உயில் எழுதி வைத்திருந்தது சம்மந்தமாக கடந்த 2007லேயே தெரிய வந்தது என்றும் உயில் உண்மை என்பதால் தான் உடனே வழக்கு போடவில்லை என்றும், எனது அம்மா இறந்த பிறகும் நான் உடனே வழக்கு போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. **(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.